**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>எம்.சி.ஓ.பி.எண் 356/2017</u>**
**<u>நாள் 08/04/2025 செவ்வாய்க்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – முத்துக்குமரன்(இளவர் ஜெய சூர்யாவுக்காக ) | த/பெயர் – பாபு |
| வயது – 41 | தொழில் – |
| விலாசம் – கவரப்பேட்டை, கும்மிடிப்பூண்டி | |

**<u>முதல் விசாரணை–</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்படுத்தப்பட்ட விபத்துக்கு 1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்களிடமிருந்து இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். என் தரப்பு சான்றாவணமாக ம.சா ஆ 1 முதல் ம.சா ஆ 7 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன். ம.சா ஆ 3 முதல் ம.சா ஆ 5 ஆவணங்கள் 2ம் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,
   (2). விபத்து பதிவேட்டு நகல் **ம.சா ஆ 2** ஆகவும்,
   (3). வாகன பதிவு சான்று நகல்**ம.சா ஆ 3** ஆகவும்,
   (4). காப்பீட்டு சான்று **ம.சா ஆ 4** ஆகவும்,
   (5). ஓட்டுநர் உாிமம் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). புறநோயாளிகள் அறிக்கை அசல் **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). மருத்துவ செலவு ரசீது அசல் **ம.சா ஆ 7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் இந்த மனுவை விபத்தால் காயம்பட்ட எனது மகனுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். விபத்தின் போது எனது மகனுக்கு 6 வயது அப்போது 1ம் வகுப்பு படித்திருந்தார். தற்போது 10ம் வகுப்பு படித்து கொண்டு இருக்கிறார். தற்போது அவருடைய வயது 15 ஆகும். எனது மகனின் படிப்பு, வயதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து கடந்த 13.08.2016 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் பெருவாயல் கிராமம் அருகே நடந்தது. மேற்படி விபத்தானது எனது மாமனாரும் எனது மகன்கள் இருவரும் மோட்டார் வாகனத்தில் கவரப்பேட்டையில் இருந்து செங்குன்றம் சென்றுக்கொண்டிருந்தபோது பின்னால் வந்த கார் மோதி விபத்து ஏற்ப்பட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். காரின் பதிவு எண் TN 22 DC 8076 ஆகும். அந்த காரை யாா் ஓட்டி வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகன் ஜெயசூர்யா கூறியதன் பெயரில் மேற்படி காரை ஒரு பெண் ஓட்டி வந்ததாக தெரிந்துக்கொண்டேன். விபத்தில் எனது மகனுக்கு தலை மற்றும் வலது காலில் காயம் ஏற்ப்பட்டது. முதல் உதவி சிகிச்சை பொன்னேரி அரசு மருத்துவமனையிலும், மேற்ச்சிகிச்சை அண்ணாநகர் சௌந்தரபாண்டியன் போன் அன்ட் ஜாயின்ட் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். மேற்படி மருத்துவமனைகளில் புறநோயாளியாகவே சிகிச்சை பெற்றுக்கொண்டார்.

விபத்து குறித்து காவல்நிலையத்தில் நான் தான் புகாா் கொடுத்தேன். 3 நாட்கள் கால தாமதமாகதான் பகாடுத்தேன் ஏன் என்றால் எனது மாமனாரை மருத்துவமனையில் வைத்து பாா்த்துக்கொண்டதால் உடனே புகார் கொடுக்க இயலவில்லை,. விபத்தில் எனது மகனுக்கு அறுவை சிகிச்சை எதுவும் நடைபெறவில்லை. விபத்து குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து ஏற்ப்படுத்தியதாக கூறப்படும் காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையோ கார் ஓட்டுநர் மீதான குற்ற அறிக்கையோ தாக்கல் செய்யிவல்லை என்றால் சரிதான். நான் அதிகபடியான நஷ்ட ஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் சட்டவிதிமுறைகளுக்கு மாறாக இரு சக்கர வாகனத்தில் 3 பேர் வைத்து ஓட்டிச்சென்றதும் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டிச்சென்றதுதான் இந்த விபத்திற்கு காரணம் என்றாலும் இது காப்பீட்டு விதிமுறைகள் மற்றும் சட்டத்திற்கு முரணானது என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாா் மற்றும் தற்போது நான் அளிக்கும் சாட்சியம் ஆகியவற்றில் காரை ஓட்டியவர் ஒரு பெண் என்று கூறியுள்ள நிலையில் மனுவில் கிரண்குமார் தான் விபத்தின் போது காரை ஒட்டியதாக கூறியுள்ளேன் என்றால் நான் மனுவில் அவ்வாறு எதுவும் கூறவில்லை காரை ஓட்டியவர் ஒரு பெண்தான் என்பதை எனது மகன் கூறியதன் மூலம் தெரிந்துக்கொண்டேன். மேற்படி பெண் ஓட்டுநரை பற்றி விவரங்கள் எதுவும் மனுவில் குறிப்பிடவில்லை என்றும் அதிக இழப்பீடு பெறுவதற்காக மேற்படி கிரண்குமார் தான் வாகனத்தை ஓட்டியதாக மனுவில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகனுக்கு ஏற்ப்பட்ட காயம் சொர்ப்ப காயம் தான் என்றாலும் அதுவும் தற்போது முழுவதும்

குணமாகிவிட்டதாலும் அதனால் தான் அவர் பள்ளிச்செல்கிறார் என்றாலும் எனவே நான் கேட்டுள்ள இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மனுவில் முன்னுக்கு பின் முரனான தகவலை கூறியுள்ளதால் எனது மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**